# பெரியார் கலைக் கல்லூரி

கடலூர் - 607 001.

# கல்லூரி உணவகக் கட்டடம்

## திறப்புவிழா அழைப்பிதழ்

நாள் : 06.01.2026, செவ்வாய்கிழமை, காலை 10.00 மணி

அன்புடையீர் வணக்கம்,

கடலூர் சட்டமன்ற உறுப்பினர்
திரு.**கோ.ஐயப்பன்,** எம்.ஏ., அவர்களின்
தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.**60,00,000/-**
செலவில் கட்டப்பட்டுள்ள கல்லூரி உணவகக்
கட்டடம் திறப்பு விழா நடைபெற உள்ளது.
பெருமை மிகு இவ்விழாவில் அனைவரும்
கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு
அன்புடன் கேட்டுகொள்கிறோம்.

இவண்

**முதல்வர், பேராசிரியர்கள்,**
**அலுவலகப் பணியாளர்கள்** மற்றும் **மாணவர்கள்**

## நிகழ்ச்சி நிரல்

**நாள் : 06.01.2026, செவ்வாய்கிழமை, காலை 10.00 மணி**

*தலைமை*

முனைவர் **ரா.ராஜேந்திரன்,** அவர்கள்

முதல்வர் (நிலை – 1)

*கட்டடத் திறப்பாளர்*

திரு.**கோ. ஐயப்பன்,** எம்.ஏ.,அவர்கள்

சட்டமன்ற உறுப்பினர் கடலூர்.

*முன்னிலை*

திருமதி.**ஆர். சுந்தரிராஜா**,அவர்கள்

மாநகராட்சி மேயர்

திரு. **பா.தாமரைச்செல்வன்,**அவர்கள்

மாநகராட்சி துணைமேயர்

*மாமன்ற உறுப்பினர்கள்*

திரு.**வே. ஆறாமுது** அவர்கள்

திருமதி.**வி. மகேஷ்வரி விஜயகுமார்** அவர்கள்

*விழாக்குழுவினர்*

முனைவர்.**கு. நிர்மல்குமார்**

முனைவர்.**வீ. பன்னீர்செல்வம்.**

முனைவர்.**ம. ஆனந்தராஜ்**

முனைவர்.**இ. சுசிகணேஷ்குமார்.**

முனைவர்.**ச. சீனிவாசன்**




GPS Map Camera
Google
Devanampattinam, Tamil Nadu, India
Pqrm+vq5, Silver Beach Rd, Devanampattinam, Tamil Nadu
607001, India
Lat 11.741837° Long 79.783815°
Monday, 05/01/2026 10:19 PM GMT +05:30



கடலூர் அரசு கல்லூரியில், தனது தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.60 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட உணவக கட்டடத்தை அய்யப்பன் எம்.எல்.ஏ., திறந்து வைத்தார்.

# அரசு கல்லூரியில் புதிய கட்டடம் அய்யப்பன் எம்.எல்.ஏ., திறப்பு

கடலூர், ஜன. 7–

கடலூர் பெரியார் அரசு கல்லூரியில், அய்யப்பன் எம்.எல்.ஏ., தொகுதி மேம்பாட்டு நிதி 60 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட உணவக கட்டடம் திறப்பு விழா நடந்தது. கல்லூரி முதல்வர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். அய்யப்பன் எம்.எல்.ஏ., புதிய உணவக கட்டடத்தை திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினார். துணை மேயர் தாமரைச் செல்வன் முன்னிலை வகித்தார்.

மாநகர கவுன்சிலர் மகேஷ்வரி விஜயகுமார் வாழ்த்தி பேசினார். விழாவில், முன்னாள் கூட்டுறவு சங்கத் தலைவர்கள் ஆதிபெருமாள், ரவிச்சந்திரன், முன்னாள் ஊராட்சி தலைவர் சுதாகர் மற்றும் பேராசிரியர்கள் நிர்மல் குமார், பன்னீர்செல்வம், ஆனந்தராஜ், சுசிகணேஷ் குமார், சீனிவாசன் உட்பட பலர் பங்கேற்றனர்.



கடலூர்

# அரசு கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி

## அய்யப்பன் எம்.எல்.ஏ. வழங்கினார்

கடலூர், ஜன.7-
கடலூர் தேவனாம்பட்டினம் பெரியார் அரசு கலைக் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதற்கு கல்லூரி முதல்வர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். மாநகராட்சி துணை மேயர் தாமரைச்செல்வன், கவுன்சிலர் மகேஸ்வரி விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக அய்யப்பன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மாணவ- மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கினார்.

இதில் பேராசிரியர்கள் நிர்மல்குமார், பன்னீர்செல்வம், ஆனந்தராஜ், சுசிகணேஷ்குமார், சீனிவாசன், முன்னாள் கூட்டுறவு சங்க தல்லவர்கள் ஆதிபெருமாள், ரவிச்சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக கல்லூரி வளாகத்தில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.60 லட்சம் செலவில் கட்டப்பட்ட கல்லூரி உணவக கட்டிடத்தை அய்யப்பன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் பேராசிரியர்கள், மாணவ- மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

### அரசு பெரியார் கலை கல்லூரியில்

# ரூ.60 லட்சம் மதிப்பில் புதிய கட்டிடம்



## ஐயப்பன் எம்எல்ஏ திறந்து வைத்தார்

கடலூர், ஜன. 7: கடலூர் தேவனாம்பட்டினம் பெரியார் அரசு கலை கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி மற்றும் ரூ.60 லட்சம் மதிப்பில் புதிய கட்டிட திறப்பு விழா நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். மாநகராட்சி துணை மேயர் தாமரைச்செல்வன், கவுன்சிலர் மகேஸ்வரி விஜயகுமார் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக ஐயப்பன் எம்எல்ஏ கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கினார். இதில் பேராசிரியர்கள் நிர்மல்குமார், பன்னீர்செல்வம், ஆனந்தராஜ், சுசிகணேஷ்குமார், சீனிவாசன், முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர்கள் ஆதிபெருமாள், ரவிச்சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதுபோன்று கல்லூரி வளாகத்தில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.60 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட கல்லூரி உணவக கட்டிடத்தை ஐயப்பன் எம்எல்ஏ திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் பேராசிரியர்கள், பொறியாளர் பாரத் பில்டர்ஸ் சுரேஷ்பாபு, மாணவ, மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.